[1972 ஆகஸ்ட் 23

Inscriptions of Pallava period

* 272 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that stone inscriptions of the Pallava age have been traced in Chengam region in the State recently; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நடுகற்கள் இது காறும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையால் செங்கம் வட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பல்லவா, கங்கா, சோழர்கால நடுகற்கள் ஆகும். பெரும்பாலானவை பல்லவர் காலத்தவை ஆகும். இவற்றில் கண்டுள்ள விவரங்கள் நூல் வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. இவை தவிர வரலாற்றுச் சிறப் புடைய வேறு சில கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் பல்லவர்களுடைய வாழ்க்கையை ஆராய வழிவகுப்பதாக இருக் கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைக் குறிக்கிற ஒரு சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சிம்மவிஷ்வன் பற்றிய கல்வெட்டுகள் அங்கே கிடைத்திருக்கின்றன. வேறு எங்கும் கிடைக் காதது அங்கே கிடைத்திருக்கின்றது. அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுதான். நாசிம்ம பல்லவன், மகேந்திர வர்மன் ஆகியவர்களைப்பற்றிய கல்வெட்டுக்களும் அங்கே கிடைத் திருக்கின்றன. அவையெல்லாம் சில அரிய தன்மைகளை நமக்குக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. மகேந்திரவர்மன் 30 ஆண்டுக்காலம் ஆண்டதாகத்தான் நமக்கு இதுவரையிலே வரலாறு கூறுகிறது. ஆனல் அவனைப்பற்றிய கல்வெட்டிலே 59-ம் ஆண்டு என்ற குறிப்போடு ஒரு கல்வெட்டு இருப்பதாலே அவன் அறுபது ஆண்டுக் காலம் ஆண்டிருக்கவேண்டுமென்ற வரலாற்றுக் குறிப்பு நமக்குக் கிடைத்ததின் காரணமாக நமக்குச் சரித்திரக் குறிப் பொன்று நமக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். இப்படிச் சரித்திரக் குறிப்புகளைக் கூறக்கூடிய வகையிலே கல் வெட்டுக்கள் சில இருக்கின்றன, மற்றவையெல்லாம் படைகளின் வெற்றி, மரணம் அடைந்தவர்களுடைய குறிப்புகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன.

1972 ஆகஸ்ட் 23]

திரு. எம். இராதாகிருட்டிணன் : தலைவர் அவர்களே. செங்கம் வட்டத்தில் எந்தக் கிராமத்தில், எந்த ஊரில் அது இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : செங்கம் வட்டத்தில் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, எந்த ஊர், எந்த வட்டம் என்பதை முழு விவரத்தைக் காண்கிறபோது அறியலாம்.

திரு. நா. வீராசாமி : செங்கம் வட்டத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் தேவ பாஷையில் எழுதப்பட்டு இருப்பதாகவும், அதிலே புதையல் அங்கே இருப்பதுபற்றிச் சொல்லப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்களா ? புதையல் ஏதாவது அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். கல்வெட்டுக்களிலே சில செய்திகளைத்தான் அறிந்திருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டுக்களின்கீழே பிணம்தான் இருப்பதாகத் தெரிகிறதேதவிர பணம் இருப்பதாகத் தெரியவில்லை.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய உயர்வுகள்

* 273 *வினா*—***திரு. கே. எ. வகாப்*** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில், புலவர், பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றும் மேற்படி பட்டங்களைப் பெறுபவர்களுக்கு, அவர்கள் வயதினைக் கணக்கிடாமல் முதலிடம் வழங்கி ஆசிரியராக நியமனம்செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொடக்கப் பள்ளிகளில் பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் புலவர் மற்றும் பி.ஏ., பி.டி. பட்டங்கள் பெறுவாராயின். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர், பி.டி. அல்லது உதவி ஆசிரியர் பதவிகளுக்கு